Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 255/2017 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW8 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | தங்கராஜ் |
| Father's Name | – | |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 26th June 2023.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது திருநெல்வேலி மாநகரம் பாளையங்கோட்டையில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2017ம் வருடம் பொள்ளாச்சி வட்டார ஆய்வாளராக பணியில்இருந்தபோது, காவல் நிலையக்குற்ற எண். 233/2017, இதச பிரிவுகள் 279, 337, 304A ன் கீழ் வழக்கு பதிவு செய்து, எனது விசாரணைக்கு வைக்கப்பட்டிருந்தை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இவ்வழக்கில் காயம்பட்ட மோகனப்பிரியா என்பவருக்கு சிகிச்சையளித்த மருத்துவரை விசாரித்து வாக்குமூலமும், காயச்சான்றிதழும் பெற்றேன்.

இவ்வழக்கில் இறந்துபோன மகாலிங்கம் என்பவரின் பிரேதத்தினை பிரேத பரிசோதனை செய்த மருத்துவரை விசாரித்து வாக்குமூலமும், பிரேத பரிசோதனை அறிக்கையும் பெற்றேன். இவ்வழக்கில்சம்பந்தப்பட்ட எதிரியை 24.11.2017ம் தேதி 21.00 மணிக்கு தனது குற்றத்தினை ஒப்புக்கொண்டு நிலையம் ஆஜரான எதிரியை உச்சநீதிமன்ற வழி காட்டுதலின் படி கைதுசெய்து பிணையில் விடுவித்தேன்.

இவ்விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்களை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலமும், மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்றேன். இத்துடன் எனது புலன் விசாரணை முடித்து எதிரியின் மீது மேற்படி சட்டப்பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். அந்த மோகனப்பிரியா காயச்சான்றிதழ் **அ.சா.ஆ.7** ஆகவும், மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் முறையே **அ.சா.ஆ.8** ஆகவும், **அ.சா.ஆ.9** ஆகவும், பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.10** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு வழக்கறிஞருக்கு குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

**மறுவிசாரணை** - இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/. Thiru. E. Pragasam B.A.,B.L.,)**

Judicial Magistrate No. II,
Pollachi.